# இலங்கை வங்கி

இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக வங்கியாகிய இலங்கை வங்கி கீழ் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு தகுந்த தகைமையும் அனுபவமும் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது

## செயலாளர் (ஆங்கிலம்)

**தேவைப்படும் தகைமைகள்**

➢ இலங்கைப் பிரஜையாக இருக்கவேண்டும்

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

- க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலமொழிஉட்பட 5 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் இரண்டு (02) பாடங்களில் (பொதுஆங்கிலம் மற்றும் பொதுஅறிவு தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

- இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் செயலாளர் நடைமுறையில் உயர்வர்த்தக சான்றிதழ் / தேசிய சான்றிதழ் வைத்திருத்தல்

**அல்லது**

- தேசியபயிலுநர் சபையின் ஆங்கில சுருக்கெழுத்தாளர் / பிரத்தியேகச் செயலாளர் சான்றிதழ்.

**அல்லது**

பொலிடெக்னிக் நிறுவனத்தின் ஆங்கில சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து சான்றிதழ்.

**அனுபவம்**

- அரசாங்க அல்லது அங்கீகரித்த தனியார் துறை நிறுவனமொன்றில் செயலாளராக/ அந்தரங்க செயலாளராக இரண்டு (02) வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது**

- விண்ணப்பமுடிவுத் திகதியில் 24 - 35 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருக்கவேண்டும்.

**ஏனைய தகைமைகள்**

- ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழிகளில் சிறந்த அறிவு (எழுத மற்றும் உரையாட)
- கணனி அறிவு முக்கியம்

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் வங்கியின் நிரந்தர ஆட்சேர்ப்பில் (மூடியசேவை) ஒரு (01) வருட தகுதிகாண் கால ஒப்பந்தத்துடன் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் அதன் பின்பு அவர்களது வேலை, நடத்தை மற்றும் வரவு ஆகியவை திருப்திகரமானதாக இருப்பின் செயலாளர் தரம் I பதவியில் உறுதிப்படுத்தப்படுவர்.
- தகைமை காண் காலம் உட்பட செயலாளர் தரம் I க்கான சம்பள அளவுத்திட்டம்:

**ரூபா 24,990/- -ரூபா 29,990/-**

**ரூபா 250/- x 20**

(2017 மே மாதத்தின் பிரகாரம் மாறுபடும் வாழ்க்கைச்செலவு உட்பட அண்ணளவு ஆரம்ப மொத்தச்சம்பளம் ரூபா 65000/- ஆகும்.)

## பயிலுநர் செயலாளர் உதவியாளர்

**தேவைப்படும் தகைமைகள்**

- இலங்கைப் பிரஜையாக இருக்கவேண்டும்

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

- க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலமொழி உட்படமூன்று (03) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் இரண்டு(02) பாடங்களில் (பொதுஆங்கிலம் மற்றும் பொதுஅறிவு தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

- இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கில மொழிமூலம் செயலாளர் நடைமுறையில் உயர்வர்த்தக சான்றிதழ் / தேசிய சான்றிதழ் வைத்திருத்தல்

**அல்லது**

- தேசியபயிலுநர் சபையின் ஆங்கில சுருக்கெழுத்தாளர்/ பிரத்தியேகச் செயலாளர் சான்றிதழ்.

**அல்லது**

பொலிடெக்னிக் நிறுவனத்தின் ஆங்கில சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து சான்றிதழ்.

**வயது**

- விண்ணப்ப முடிவுத் திகதியில் 20 - 28 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருக்கவேண்டும்.

**ஏனைய தகைமைகள்**

- ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழிகளில் சிறந்த அறிவு (எழுத மற்றும் உரையாட)
- கணனி அறிவு முக்கியம்

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் வங்கியின் நிரந்தர ஆட்சேர்ப்பில் (மூடியசேவை ) இரண்டு (02) வருட பயிற்சிக்கால ஒப்பந்தத்துடன் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் அதன் பின்பு அவர்களது வேலை, நடத்தை மற்றும் வரவு ஆகியவை திருப்திகரமானதாக இருப்பின் செயலாளர் உதவியாளர் தரம் I பதவியில் உறுதிப்படுத்தப்படுவர்.
- பயிற்சிக்காலத்தில் சகலதும் உட்பட மாதாந்தக் கொடுப்பனவு

  முதலாவது வருடம் - ரூபா. 18,000/-
  இரண்டாவது வருடம் - ரூபா 22,000/-

- செயலாளர் உதவியாளர் தரம் 1 க்கான சம்பள அளவுத்திட்டம்:

**ரூபா 22,485/- -ரூபா 26,285/-**

**ரூபா 190/- x 20**

(2017 மே மாதத்தின் பிரகாரம் மாறுபடும் வாழ்க்கைச்செலவு உட்பட அண்ணளவு ஆரம்ப மொத்தச்சம்பளம் ரூபா 61500/- ஆகும்)

- இப்பதவி வங்கிச் சேவையின் பொதுவிதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய காணப்படினும் சாதாரண வங்கியியலுக்குப் புறம்பானதாகும் (மூடியசேவை).
- தகுதிகாண் காலத்தில்/ பயிற்சிக்காலத்தில் சில குறிப்பிட்ட அனுகூலங்கள் வழங்கப்படுவதுடன் .வங்கிச்சேவையில் உறுதிப்படுத்தியதன் பின்பு நிரந்தர ஆட்சேர்ப்பு ஊழியர்கள் அனுபவிக்கும் ஏனைய சகல நன்மைகளும் வழங்கப்படும்.
- நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருக்கவேண்டும்.

## தெரிவு செய்யும் முறை

### செயலாளர் (ஆங்கிலம்)

கீழ்வரும் பரீட்சைகள் மூலம் தெரிவு நடைபெறும்.

- கணனியில் வேகப்பரீட்சை (நிமிடத்துக்கு 40 சொற்கள்) மற்றும் சுருக்கெழுத்து
- ஆங்கிலமொழியில் எழுத்துப்பரீட்சை
- நேர்முகப்பரீட்சை

### பயிலுநர் செயலாளர், உதவியாளர்

கீழ்வரும் பரீட்சைகள் மூலம் தெரிவு நடைபெறும்.

- கணனியில் வேகப்பரீட்சை (நிமிடத்துக்கு 40 சொற்கள்)
- நேர்முகப்பரீட்சை

## விண்ணப்பிக்கும் முறை

உங்களது சுய விபரங்களை www.boc.lk எனும் எங்களது இணையதளத்திலிருந்து (“Careers” எனும் tab ஊடாக) தரவிறக்கம் செய்த மாதிரி விண்ணப்பப்படிவத்தை பிரயோகித்து 2017 ஜுன் 16 அல்லது அதற்கு முன்பு பிறப்புச்சான்றிதழ், தேசியஅடையாள அட்டை, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள்,அனுபவத்தை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் ஆகியவற்றின் **போட்டோப்பிரதிகளுடன்** கடித உறையின் இடது மேற்பக்க மூலையில் செயலாளர் (ஆங்கிலம்) அல்லது பயிலுநர் செயலாளர் உதவியாளர் எனக் குறிப்பிட்டு கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

மேலே கோரப்பட்ட தகைமைகள் அல்லது மாதிரிப் படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்பு கிடைத்த விண்ணப்பங்கள் யாவும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**மனிதவளச் செயற்பாடுகள்**
**26ஆம் தளம்**
**இலங்கை வங்கி தலைமையகம்**
**BOC சதுக்கம், இல.01**
**இலங்கை வங்கி மாவத்தை,**
**கொழும்பு 01.**

BANK OF CEYLON

*எவையேனும் விதத்தில் ஆதரவு நாடுவோர் தகைமையை இழப்பர்.*
*தெரிவு செய்த விண்ணப்பதாரர்களை மாத்திரம் அழைப்பதற்கான உரிமை வங்கிக்கு உண்டு.*